நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 29/ 2023 நாள். 24.11.2023

## **<u>சாதாரணக்</u>**<u>கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **30.11.2023** வியாழக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**பொன்னேரி நகராட்சி**

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>

### <u>பொருள் எண் 1</u>

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் நவம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 341 நாள்: **30.11.2023**

**தீர்மானம்:** ஆணையர் அவர்களின் நவம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது. மன்றம் அனுமதி அளிக்கிறது.

### <u>பொருள் எண் 2</u>

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் நவம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 342 நாள்: **30.11.2023**

**தீர்மானம்:** பொறியாளர் அவர்களின் நவம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது. மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **31.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு **6** விவேகானந்தர் தெருவிற்கு GSB அமைத்தல் | **4.80** | SHKP Construction , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு தொகை |
| | | | ATS Infra ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.99 % அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .

( ந.க.எண் 104 /2023 / இ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 343 நாள்: **30.11.2023**

**தீர்மானம்:** மேற்படி பணிகள் மேற்கொள்ள **31.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி SHKP Construction ஒப்பந்ததாரராக ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 4

பொன்னேரி நகராட்சியில் **15**வது நிதிக்குழு மானியம் **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள **31.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | காமராஜர் தெருவில் **(183026R226 )** சிமெண்ட் சாலை அமைத்தல் | **5.00** | SSB Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | பி. ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.10 % அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .

( ந.க.எண் 104 /2023 / இ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 344 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** 15வது நிதிக்குழு மானியம் 2023 – 24–ன் கீழ் காமராஜா தெருவில் சிமெண்ட்சாலை அமைக்க குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த SSB Enterprises ஒப்பந்ததாரர் ஒப்பந்த புள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 5

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2023–24–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள 26.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோக மின் மோட்டார் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான வால்வுகள் மற்றும் உதிரி பொருட்கள் சப்ளை செய்தல் | 5.00 | திரு. எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. E சதீஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1 பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 345 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** குடிநீர் விநியோக மின் மோட்டார் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான வால்வுகள் மற்றும் உதிரி பொருட்கள் சப்ளை, செய்தல், குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்ற பார்வைக்கு வைக்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 6

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2023–24–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள 26.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ . எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகத்திற்கு தேவையான உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் | 5.00 | SMS இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர் | குறைவு |
| | | | ஆனந்த் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர் | அதிகம் |
| | | | திரு. எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | அதிகம் |
| | | | திரு. E சதீஷ் ஒப்பந்ததாரர் | அதிகம் |

அலுவலக குறிப்பு

1 பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 346 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** பொது நிதி 2023–2024–ம் திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள 26.10.2023 ஒப்பந்தபுள்ளி கோரியதில், பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த SMS Engineering குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்பட்டு, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 7

இந்நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்க சாலையோரங்களில் மண்கால்வாய் அமைக்கவும், , வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், தேவையான ஜேசிபி வாகனங்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினால் இநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 15 வரையில் வாடகை அடிப்படையில் ஜேசிபி வாகனங்களை பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 347 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 – 15 வரையில் வாடகை அடிப்படையில் JCB வாகனங்களை பயன்படுத்திக்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தினை, பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்குகிறது. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 8

இந்நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்க சாலையோரங்களில் மண்கால்வாய் அமைக்கவும், , வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், தேவையான ஜேசிபி வாகனங்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினால் இநககராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 16 முதல் 27 வரையில் வாடகை அடிப்படையில் ஜேசிபி வாகனங்களை பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 4.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 348 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** வார்டு எண் 16– 27 விரைவில் மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு JCB வாகனங்கள் பயன்படுத்திக் கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.70– இலட்சத்திற்கு பொது நிதியின் மேற்கொள்ளவும், பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரினை ஏற்கனவே உள்ள டீசல் மோட்டார்கள் மற்றும் மின்மோட்டார்கள் மூலம் வெளியேற்ற தேவையான குழாய்கள் , Starters , வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள் , சவுக்கு கொம்புகள் போன்றவற்றினை தயார் நிலையில் வைத்துக்கொள்ள ஏதுவாக கொள்முதல் செய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 349 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** தேங்கும் மழை நீரினை வெளியேற்ற, மதிப்பீட்டுத் தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 10

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணியினை மேற்கொள்ள **20.11.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | **சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக** GSB ( Granular Sub Base ) **கொண்டு சீரமைத்தல்** | 5.00 | எஸ். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.80% அதிகம் |

அலுவலகக்குறிப்பு

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 350 நாள்: **30.11.2023**

**தீர்மானம் : 20.11.2023** அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த S.Prakash -க்கு ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கிறது.

## பொருள் எண் 11

பொன்னேரி நகராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 -ன்கீழ் கட்டப்பட்டுள்ள கூடுதல் அலுவலக கட்டிடத்திற்கு மும்முனை மின் இணைப்பு வழங்குமாறு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் ரூ. **33472** /- வழங்குமாறு மேற்காணும் அலுவலகம் மூலமாக கேட்பு வரப்பெற்றுள்ளதால் தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு

1 மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

( ந.க.எண் **262 /2023** /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 351 நாள்: **30.11.2023**

**தீர்மானம் : 2022 – 23**ன் கீழ் கட்டப்பட்டுள்ள கூடுதல் அலுவலக கட்டிடத்திற்கு மும்முனை மின் இணைப்பு வழங்க ரூ. **33472 /–** வழங்க அலுவலக கேட்பு வரப்பெற்றுள்ளதால் தொகை செலுத்திட மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் அம்ருத் **2.0** திட்டத்தின்கீழ் வார்டு எண் **23** ல் அமைந்துள்ள ஜிவிஎன் நகர் பூங்காவில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பூங்காவிற்கு மும்முனை இணைப்பு வழங்குமாறு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் ரூ.**15682**/- வழங்குமாறு மேற்காணும் அலுவலகம் மூலமாக கேட்பு வரப்பெற்றுள்ளதால் தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு

1 மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

( ந.க.எண் **262 /2023** /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 352 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** வார்டு எண் **23**ல் – GVN நகர் பூங்காவில் மும்முனை இணைப்பு வழங்க ரூ.**15682/–** தொகை செலுத்திட மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட 22வது வார்டு பஞ்செட்டி சாலை ஏரிக்கரையில் உள்ள மின்கம்பங்களுக்கு தெருமின்விளக்குகள் அமைக்க மின் இணைப்பு வழங்குமாறு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் ரூ. 4340/- வழங்குமாறு மின்அலுவலகம் மூலமாக கேட்பு வரப்பெற்றுள்ளது . தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
( ந.க.எண் 262 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 353 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** வார்டு எண் 22ல் பஞ்செட்டி சாலை ஏரிக்கரையில் உள்ள மின்கம்பங்களுக்கு – மின் இணைப்பு வழங்க ரூ. 4340/– தொகை வழங்க மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 14

மாண்புமிகு தமிழக அரசின் ஆட்சியின்கீழ் பொன்னேரி நகராட்சியில் 2022-23 மற்றும் 2023-24 ல் நடைபெற்ற மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரம் 23.10.2023 அன்று தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டது. விளம்பரம் வெளியிடப்பட்ட வகையில் அதற்கான தொகை வழங்குமாறு ரூ. 24570 /-க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை The Daily Thanthi , Chennai -7 என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
( ந.க.எண் 1273 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 354 நாள்: 30.11.2023

**தீர்மானம் : 2022 – 2023** மற்றும் **2023 – 2024 –** க்கான விளம்பரம் வெளியிடப்பட்ட வகையில் ரூ.24570க்கு தொகை The Daily Thanthi Chennai – 7 வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 15

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதாலும், தற்போது மழை பெய்து வருவதாலும், சாலைகள் மழை காலத்தில் சேறும் சகதியுமாக உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இது தொடர்பாக நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்தும் நாளிதழ்களிலும் தொடர்ந்து செய்திகள் வந்தவாறு உள்ளது.

எனவே சேதமடைந்துள்ள அனைத்துசாலைகளையும், தற்காலிகமாக WMM ( Wet mix Mecadam) கொண்டு சீரமைக்க வேண்டியுள்ளது. எனவே அதற்காக உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 355 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** சேதமடைந்துள்ள அனைத்து சாலைகளையும் தற்காலிகமாக WMM –கொண்டு சீரமைக்க – செலவினம் ரூ. 9.50 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 16

பொன்னேரி நகராட்சியில் டி.எச்.ரோட்டில் அமைந்துள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளம் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தின் முகப்பு அருகில் உயர்மின்விளக்கு ( High Mast Light) CSR பெருநிறுவன நிதியின்கீழ் M/s India Cement நிறுவனம் மூலம் அமைக்கப்பட உள்ளதாகவும், மேற்படி உயர்மின்விளக்கிற்கு நகராட்சி மூலம் மின்பயன்பாடு சேவை வழங்குமாறு சார் ஆட்சியர், பொன்னேரி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து , அதற்கான மும்முனை இணைப்பு வழங்கிட வேண்டி உதவி செயற்பொறியாளர், TNEB , பொன்னேரிக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் ரூ. 15645/- வழங்குமாறு மேற்காணும் அலுவலகம் மூலமாக கேட்பு வரப்பெற்றுள்ளதால் தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
( ந.க.எண் 262 /2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 356 நாள்: 30.11.2023

**தீர்மானம் :**DR. MGR Fisheries Research நிறுவன வளாகத்தில் உயர் மின் விளக்கு CSR பெருநிறுவன நிதியின் கீழ் M/s India Cement நிறுவனம் மூலம் அமைக்கப்பட உள்ளதாகவும், நகராட்சி மூலம் மும்முனை இணைப்பு வழங்கிட ரூ.15645/– கேட்பு வரப்பெற்றுள்ளதால் – தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## <u>பொருள் எண் 17</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில், பராமரிக்கப்படும் **20** எண்ணிக்கை புஷ்கார்ட் (PushCart) வாகனங்கள் பழுதடைந்து உள்ளது. தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ளதால் பொது மக்கள் சுகாதார நலன் கருதி, மேற்படி வாகனங்கள் பழுது நீக்கம் செய்து நல்ல நிலையில் வைக்க வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் ரூ **0.90** இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்டுகிறது. மேலும் பொது சுகாதார நலன் கருதியும் அவசர அவசியத்தை முன்னிட்டும் உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. Swart Enterprises. Chennai - ரூ 73809 /-
2. R.N.M Enterprises. Chennai - ரூ 78910 /-

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Swart நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கு பின்னேற்பு வழங்கலாம்

**(ந.க. எண்: 1318 / 2023/ எச்1)**

நகர்மன்ற தீர்மான எண்: 357 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** 20 Push Cart வாகனங்கள் பழுது நீக்கம் செய்து நல்ல நிலையில் வைக்க – செலவினம் **0.90** இலட்சத்திற்கு மன்ற அனுமதியும், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Swart நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 18</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்**17404/2022**/எம்**1**, நாள். **13.09.2023**ன்படி , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ், **2023–2024** ஆம் ஆண்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் **01** முதல் **05–**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி

பரிமாறும் பணியாளர்களுக்கு ஆகஸ்ட் , செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2023 மாதத்திற்கான மாத மதிப்பூதியமாக ரு. 16,500 /– வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண். 223 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 358 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ் சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு Aug, Sep, Oct 2023 மாத மதிப்பூதியம் ரூ. 16500/– வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## பொருள் எண் 19

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 7ல் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் காந்தி தெரு, மூவேந்தர் தெரு மற்றும் பாரதி தெருவில் போதிய அளவில் குடிநீர் விநியோகம் இல்லாததால் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு குடிநீர் அவசியம் கருதி மூவேந்தர் தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 4.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .
(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 359 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** வார்டு எண் 7ல் குடிநீர் அவசியம் கருதி மூவேந்தர் தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திட, மதிப்பீட்டு தொகை ரூ.4.70 – இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு மன்றம் அனுமதி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 20

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 11ல் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் ராம்நகர் பகுதியில் போதிய அளவில் குடிநீர் விநியோகம் இல்லாததால் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி ராம்நகர்

பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 4.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 360 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :**Ward எண்.**11**–ல் ராம் நகர் பகுதியில் –புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திட, மதிப்பீட்டு தொகை ரூ.**4.70** இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>பொருள் எண் 21</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் **18**ல் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் வேணுகோபால் தெரு டி.எச். ரோடு சாலையில் போதிய அளவில் குடிநீர் விநியோகம் இல்லாததால் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி வேணுகோபால் தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **4.70** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 361 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** Ward எண்.**18**–ல் வேணுகோபால் தெருவில் – புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்திட – மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.70** இலட்சத்திற்கு – பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 22

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் **24**ல் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் பஞ்செட்டி சாலை மற்றும் விநாயகர் நகர் பகுதிகளில் போதிய அளவில் குடிநீர் விநியோகம் இல்லாததால் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி பஞ்செட்டி சாலையில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **4.70** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .
(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 362 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** Wd 24-ல் விநாயகர் நகர் பகுதியில், பஞ்செட்டி சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திட **–** மதிப்பீட்டு தொகை ரூ, **4.70** – இலட்சத்திற்கு பணியினை பொதுநிதியின் கீழ்மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி, மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 23

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் **15**ல் அமைந்துள்ள எட்டியம்மன் கோயில் குறுக்கு தெருவில் சாலைவசதி இல்லாத காரணத்தினாலும் , இயற்கை இடர்பாடுகளாலும் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறாகவும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **4.60** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .
(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 363 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** Wd 15-ல் அமைந்துள்ள எட்டியம்மன் கோயில் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்திட, மதிப்பீட்டுத் தொகை ரூ.4.60 இலட்சத்திற்கு, பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டியுள்ளதால் – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

## **<u>பொருள் எண் 24</u>**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 6ல் அமைந்துள்ள விவேகானந்தர் தெரு ( பாரதி நகர் முதல் எஸ்எம்ஆர் நகர் வரை ) மற்றும் அண்ணா தெருக்களில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தார்தளம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியின் மூல மதிப்பீட்டில் சாலையின் பரப்பில் WMM மற்றும் தார்தளம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொண்டதாலும், இயற்கை இடர்பாடுகளாலும், சாலை முற்றிலும் சேதமடைந்து போக்குவரத்திற்கு ஏற்ப இல்லாததால் சாலையின் அடித்தளத்தினை உயர்த்திட ஏதுவாக GSB கொண்டு தளம் அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட சாலைகளின் அவசியத்தினை கருதி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 364 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :**Wd 6-ல் விவேகானந்தா தெரு, அண்ணா தெருக்களில் சாலையின் அடித்தளத்தினை உயர்த்திட GSB கொண்டு தளம் அமைத்திட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு பணியினை பொதுநிதியின் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## **<u>பொருள் எண் 25</u>**

இந்நகராட்சியில் 13வது வார்டு எல்லைக்குட்பட்ட நீலிஅப்பாதுரை தெரு மற்றும் அங்கமுத்து தெரு சந்திப்பில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் பயன்பாட்டில் உள்ள RCC பைப் கல்வெர்ட் சுமார் 1 அடி விட்டத்தில் உள்ளது. இந்த RCC பைப் கல்வெர்ட் அமைக்கப்பட்டு சுமார் 15 வருடங்கள் மேலான நிலையில் பெரும்பகுதி பழுதடைந்தும், மண்கொண்டு மூடிய நிலையில் உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் சீராக வெளியேறாமல் சாலையில் தேங்கி போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும், கேடு விளைவிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி நீலிஅப்பாதுரை தெரு மற்றும் அங்கமுத்து தெரு சந்திப்பில் புதியதாக RCC Box கல்வெர்ட் அமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .
(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 365 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :**Wd 13-ல் நீலி அப்பாதுரை தெரு, மற்றும் அங்கமுத்து தெரு சந்திப்பில் புதியதாக RCCBOX – கல்வெர்ட் அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.**2.00** இலட்சத்திற்கு பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 26</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் **6**ல் அமைந்துள்ள கன்னையா நகர் பகுதியில் சாலைவசதி இல்லாத காரணத்தினாலும், இயற்கை இடர்பாடுகளாலும் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கு இடையூறாகவும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி கன்னையா நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **4.30** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 366 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** Wd 6-ல் கன்னையா நகர் பகுதியில் –Cement சாலை அமைத்திட, மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.30** இலட்சத்திற்கு பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 27</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் **26**ல் அமைந்துள்ள சங்கர் நகர் காமராஜர் தெருவில் போதிய சாலைவசதி இல்லாத காரணத்தினாலும் , இயற்கை இடர்பாடுகளாலும் மேலும் அப்பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதால் சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாகவும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும்

நிலையுள்ளது. எனவே பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி சங்கர் நகர் காமராஜர் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 5.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

( ந.க.எண். 104 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 367 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** Wd 26-ல் சங்கர் நகர், காமராஜர் தெருவில், Cement சாலை அமைத்திட, மதிப்பீட்டுத் தொகை ரூ.5.90 இலட்சத்திற்கு பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 28

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணியினை மேற்கொள்ள **20.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | பொன்னேரி நகராட்சியில் 3 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள பணியாளர்களை பணியமர்த்துதல். | 12.00 | Aarudra Corp, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Annamalayar Constructions ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/s Aarudra Corp நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம் .

( ந.க.எண் 6 /2023 / எச்1)

நகர்மன்ற தீர்மாண எண்: 368 நாள்: 30.11.2023

**தீர்மானம் :** பொது நிதி **2023–24**–ன் கீழ் **3** மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள பணியாளர்களை பணியமர்த்த குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/S Aarudra Corp –நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 29</u>

இந்நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின்போது மழைநீர் தேங்காமல் சீராக செல்லும்வகையில் மழைநீர் கால்வாய்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ளவும், அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. **6.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண். 104 /2023/அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 369 நாள்: **30.11.2023**

**தீர்மானம் :** மழைநீர் கால்வாய்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.0** இலட்சத்திற்கு , பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.